# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 12, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, சனவரி 25, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்''.

தீயால் சுடப்பட்டாலும் ஒருகால் உயிர்பிழைத்து வாழலாம். ஆற்றல் மிகுந்த பெரியாரிடத்தில் தவறு செய்து நடப்பவர் தப்பிப் பிழைக்க முடியாது.

## 1. வினாக்கள்— விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### தமிழ்மொழி பாதுகாப்பு தியாகிகளுக்கு உதவித்தொகை

*1060—திரு. வ. முல்லைவேந்தன் : திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்மொழி பாதுகாப்பு தியாகிகளுக்கு வழங்கி வந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டுவிட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) தொடர்ந்து உதவிப்பணம் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[1990 சனவரி 25

திரு. வ. முல்லைவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழி காப்பதற்காகப் போராடி சிறைச்சாலைகளில் அடைபட்டும் அதே நேரத்தில் உயிர் நீத்த பலரது குடும்பங்கள் இருக்கின்றன. அதே போல மொழி காப்பதற்காக இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது நகலை எழுதிக் கொளுத்திய குற்றத்திற்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் உட்பட 10 சட்டப்பேரவை உறுப்பினர்கள் பதவி இழந்தார்கள். அதே போல பல ஆயிரக் கணக்கான பேர்கள் இரண்டு மாதம், 3 மாதம் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார்கள். கலைஞர் அவர்கள்கூட கைதி கூடையிலே சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டிருந்தார். அப்படிப்பட்ட தியாகிக் குடும்பங்கள் எல்லாம் பாராட்டத்தக்க வகையிலும்....... (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாதான் கேட்கவேண்டும்.

திரு. வ. முல்லைவேந்தன் : அப்படிப்பட்ட தியாகிக் குடும்பங்களின் பிள்ளைகளுக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்போது கேட்கப்பட்ட துணைக் கேள்வி சற்று விரிவானது. அவை அத்தனைக்கும் பதில் சொல்லக்கூடிய வாய்ப்பு இப்போது இல்லை. எந்தெந்தத் துறையில் அப்படி இட ஒதுக்கீடு செய்யக்கூடிய வாய்ப்பு இருந்து செய்யப்பட்டிருக்கிறதோ அவற்றிலே தான் வேலை கிடைக்குமே தவிர பொதுவான பதில் கோருவது நியாயம் அல்ல.

திரு. மு. இராமநாதன் ; பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்மொழிப் பாதுகாப்புத் தியாகிகள் தாங்கள் சிறையில் இருந்த காலத்தில் அதற்குண்டான சான்றிதழைப் பெற்று உதவித் தொகை பெறுவதற்கு அரசிடம் விண்ணப்பிக்க முடியாத நிலையில் அவர்கள் சிறையில் இருந்த சான்றே அழிந்து போய்விட்டது அல்லது காணாமல் போய்விட்டது என்கின்ற ஒரு காரணத்தினால் இந்த உதவித் தொகை பெறமுடியாமல் மறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த நேரத்தில் சிறையில் இருந்த தகுதி வாய்ந்த ஒருவர் கொடுக்கின்ற சான்றிதழை ஏற்று அவர்களுக்கு அந்த உதவித்தொகை கிடைப்பதற்கு அரசு உத்திரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விண்ணப்பங்கள் முறைப்படி கருணையோடு பரிசீலிக்கப்படும்.

1990 சனவரி 25]

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தத் தமிழ்மொழிப் பாதுகாப்புத் தியாகிகள் என்ற வகையில் குமரி மாவட்டத்திலிருந்து இந்தப் போராட்டத்திற்காகப் பாடுபட்டவர்களுக்கு எல்லாம் ஒரு பட்டியல் மூலம் முதலிலே பணம் கொடுக்கப்பட்டது. மீண்டும் வேண்டுகோள் விடுத்த பிறகு இரண்டாவது பட்டியலும் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். இன்னும் மனு கொடுத்தவர்களிலே யாராவது மீதி இருக்கிறார்களா, மனு கொடுத்தவர்களுடைய அனைத்துக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளதா ? மற்ற தியாகிகளுக்குக் கொடுக்கின்ற பஸ் போக்குவரத்து போன்ற சலுகைகள் அவர்களுக்கும் உண்டா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த விண்ணப்பங்கள் மறுபடியும் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருடைய சான்றோடு அவை பெரும் அளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏதாவது குறை இருக்குமானால் தனிப்பட்ட விண்ணப்ப அடிப்படையில் சுட்டிக்காட்டினால் அதுபற்றி ஆய்வு செய்வோம். அதே நேரத்தில் பஸ் போக்குவரத்து பற்றி நேற்றைய தினம்தான் அறிவிக்கப்பட்டது. அது அவர்களுக்கு இல்லையென்றால் விண்ணப்பிக்கலாம்.

திரு. அ. மலர்மன்னன் : தலைவர் அவர்களே, இந்த மொழிப் போரில் இன்றைய தினம் தாப்பலூர் சின்னச்சாமி, சிவலிங்கம், அரங்கநாதன், விராலிமலை சண்முகம், ஆசிரியர் வீரப்பன், சத்தியமங்கலம் முத்து, தொண்டாமுத்தூர் தண்டபாணி போன்றவர்கள் எல்லாம் தீயிட்டுக் கொளுத்திக்கொண்டு இந்தத் தமிழ்மொழியைக் காப்பதற்காகத் தங்கள் இன்னுயிரைத் தந்திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுமா அல்லது வருங்காலத்திலாவது அந்தக் குடும்பங்களைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா ? அச்செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

9.05 மணி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழிப் போர் தியாகிகளுக்கு, திராவிட முன்னேற்றக் கழகம், அதேபோல அவர்களிடத்திலே அனுதாபம் உள்ளவர்கள், அவர்களுடைய குடும்பங்களுக்குத் தகுந்த வகையில் உதவி செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல ஆதரவு வழங்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம், ஒரு கொள்கை என்ற முறையில் இவற்றைப் பரிசீலிப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. மாறாக அவர்கள் செய்த தியாகத்திற்கு ஈடாக எந்த விதமான விலையும் மதிப்பும் எளிதாக முடிவு செய்ய முடியாத ஒன்று. நம்முடைய உணர்வுகள், அந்த வீரத் தியாகிகளிடத்திலே உள்ள மதிப்பின் காரணமாக, நம்முடைய உணர்வுகள் மேம்படுமானால், அந்த உணர்வை மதித்துச் செயல்படுவோமேயானால் அதுதான் நாம் அவர்களுக்குச் செய்யக் கூடிய உண்மையான வீர வணக்கமாகும்.